உ
குருபாதம்

Regd. No. M. 4454.

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

சித்திரபானுவு பங்குனிமீ — APRIL 1943.



இவ்வாதீனத்துக்குச் சொந்தமான
திருக்குறுக்கைக் கோவில்.

திருச்சிற்றம்பலம்

த்தமா மயனு மாலு மன்றிமற் றொழிந்த தேவர்
சாத்தமெம் பெருமா னென்று தொழுதுதோத் திரங்கள் சொல்லத்
ர்த்தமா மட்டமி முன் சீருடை ஏழு நாளும்
த்தராய் வீதி போந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே

# குத்தகை ஏல விளம்பரம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான (வைத்தீஸ்வரன்கோயில்) வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்குச் சொந்தமான நிலங்களில் அடியிற்கண்ட ஊர்களில் உள்ள நன்செய் புன்செய் வகையராவை மாயவரம் சப்கோர்ட்டாரவர்களால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆக்ஷனீயர் Sri. C. S. பம்பாபதி சாஸ்திரியார் அவர்களால் 1943ஹு ஏப்ரல்மீ 24, 25உகளில் வேளூர் தேவஸ்தானம் கச்சேரியில் ஒவ்வொரு நாளும் பகல் 2மணிமுதல் குத்தகைக்கு ஏலத்தில் விடப்படும். இதர விபரம் வேண்டுவோர் வேளூர் தேவஸ்தானம் ஆபீஸில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

சீர்காழித் தாலூகா: திருப்பங்கூர், ஐவேலி, மணிக்கிராமம், கற்கோவில், சானும்பட்டம், தைலம்மைபுரம், தொழுதூர், கதிராமங்கலம், ஷடிபுகலினும், சித்தேரி, தெக்குவெளி, பனங்காட்டாங்குடி, வடபாதி, ஆர்பாக்கம், திருநாவுக்கரசுநல்லூர், குமரக்கட்டளை செம்புதநிருப்பு, அல்லிவிளாகம், மல்லுகுடி, மேலவரவுகுடி, கோடங்குடி, தோட்டமான்யம், கடை, தோப்பு, குளம்பாசி, குத்தகை வகையரா.

மாயவரம் தாலூகா: ஆத்துக்குடி, மல்லியக்கொல்லை, ஆறுபாதி, குருமாணக்குடி, அரசங்குப்பம், நீடூர், கொத்தவநல்லூர், கடுவங்குடி, தி. குறுக்கை.


நன்னிலம் தாலூகா: மேனுங்குடி, கொல்லுமாங்குடி,

திருத்துறைப்பூண்டித் தாலூகா: தாணிக்கோட்டகம்.

நாகப்பட்டினம் தாலூகா: பிராதப்ராமபுரம்.

திருச்சி ஜில்லா, திருச்சி தாலூகா: சுரியூர், துவாகுடி.

ஞானசம்பந்தம் டிரஸ்டி அவர்கள் — 1—4—43. — C. S. பம்பாபதி சாஸ்திரியார். ஆக்ஷனீயர்.



உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடோர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
லையவுன் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.


| மலர் 2 | சித்திரபானு௵ பங்குனி௴<br>APRIL 1943 | இதழ் 5 |
|---|---|---|



இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம் - சிவகுருநாதத் தம்பிரான்.


உள்ளுறை


1. சிவாகம சீலம். 163

2. பத்தித் தனித்தெப்பம்—
திரு. R. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள்,
சென்னை. 166

3. **பிள்ளைகண்ட கள்வன்—**

*வித்துவான், திரு. அருணைவடிவேலு முதலியார் அவர்கள்,*
*தமிழாசிரியர், D. R. S. ஸ்கூல், காஞ்சிபுரம்.* 170

4. **தேவாரப் பண்கள்—**

*திரு. S. இராமலிங்க ஓதுவார் அவர்கள்,*
*தேவார ஆசிரியர், முதலியார் பாடசாலை, சிதம்பரம்.* 176

5. **திருவுந்தியார் உரைநடை—**

*திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B.A., L.T.,*
*பச்சையப்பன் உயர்தரப்பள்ளி, காஞ்சிபுரம்.* 179

6. **திருவைந்தெழுத்தின் பெருமை—**

*வித்துவான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்,*
*M.A., B.L., தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப்*
*பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.* 182

7. **குருஞானசம்பந்தர்—**

*திரு. S. தண்டபாணி,*
*தருமபுர ஆதீனப் பாடசாலை மாணவன்.* 187

8. **The Gleanings from Saiva Siddhantha—**

Sri, R. Shanmukhasundaram Chettiar, Madras. 190

9. **Tillai-Vazh-Anthanar—**

S. Kanuswamy Pillai B. A.,
Dharmapuram Adheena Vidwan. 193

10. **Vedas and Saiva Agamas.** 196

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே

திருச்சிற்றம்பலம்

---

## சிவாகமசீலம்

(132-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி எம்போல்வாரும் இயற்றுதற்கெளிதாய மெல்வினைச்சிவதன்மமாகிய சிவாகமசீலம் நித்தியம் நைமித்திகம் காமியம் எனவும், ஆன்மார்த்தம் பரார்த்தம் எனவும் பலவேறு பிரிவினதாதலின் அவற்றுள் ஈண்டு எடுத்துக்கொண்டது நித்தியகருமமா (நாட்கடன) கிய சீலமேயாம். அதுவும் வைகறைத் தியானம் முதலாகப் பானட்கங்குல் (அர்த்தராத்திரி) சந்தியீறாகிய பல பிரிவுடையதாம். அப்பிரிவுகளுள் சிலவே இக்கட்டுரையில் விளக்கப்படும்.

சிவாகமசீலங்கள் எல்லாம் சிவதீக்கை பெற்றுச் சிறப்புவகையாற் சைவசமயிகளாயினோர்க்கே உரியனவாம். அச்சிவதீக்கையும் சமயம், விசேடம், நிர்வாணம் எனவும், அபிடேக மெனவும் நான்கு திறத்ததாம். அந்நான்கனுள் சமயதீக்கையாவது சைவமந்திரங்களை

உச்சரித்தற்கு உரிமை தருவது. விசேட தீக்கையாவது சிவபூசை, சிவாகமக்கல்வி, சிவயோகம் என்பவற்றுக்கு உரிமை தருவதாம். நிர்வாணதீக்கையாவது மேற் கூறிய தீக்கை இரண்டனோடு அத்துவசுத்திவாயிலாகச் சிவத்துவமாகிய எண்குணங்களும் ஆன்மாவுக்கு விளங்கச்செய்து உபதேசகலையாகிய ஞானபாதப் பொருளைக் கற்றற்கும் கேட்டற்கும் உரிமை தருவதாம். இவற்றை,

*விரும்பியமந் திராதிகார மர்ச்சனாதி கார*
*மேவுமியோ காதிகார மெனச்சமய விசேடம்*
*வரும்பொருவி னிருவாண மந்திரங்கள் பதங்கள்*
*வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள்*
*இரங்கடைவிற்றொகைபதினொன்றெண்பத்தொன்றைம்பத்தொன்*
*றிருநூற்றோ டிருபத்து நாலாறு றைந்திற்*
*பாந்தநெறி யறுவகையு மொருவிநினை வரிதாம்*
*பரபதத்து ளுயிர்விரவப் பயிற்று மன்றே.*

என்னுஞ் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தால் அறிக. அத்துவசுத்தியில்லார்க்கு உபதேசகலைநூற்கல்வியில் உரிமை இல்லை என்பது பவுட்கரவிருத்தி, முத்தி நிச்சயப்பேருரை முதலியவற்றுள் தொல்லாசிரியர் இனிது விளக்கினாராகலின் அவற்றிற் கண்டுகொள்க. பரமேசுரனது ஆணைரூபமாகிய சிவாகமவிதியையும் ஆசிரியர்கள் எமக்கு அருளிய கட்டளையையும் கடத்தலாகாது. **नोल्लङ्घनीयाहि गुरोरनुज्ञा** ஆசாணை கடத்தலாகாதே என்றார் மிருகேந்திரவிருத்தியுடையாரும்.

இனி, அபிடேகமாவது மேற்கூறிய மூன்று தீக்கைகளும் பெற்று ஓதி உணர்ந்து சிவாகம ஒழுக்கநெறி இழுக்காத உத்தம மாணவர்கள் நித்திய நைமித்திக காமிய மென்னும் மூன்றினும் உரிமையுடையராம்படி அவரது ஆன்மசைதன்னியத்திலே சிவபெருமானைச் சிவலிங்க முதலியவற்றிற் போலப் பிரதிட்டை செய்தலாம். இங்ஙனம் கூறிய தீக்கை வேறுபாடுடைய நால்வரும் சமயி, புத்திரகன், சாதகன், ஆசாரியன் எனப்

பெயர் பெறுவர். இவ்வேறுபாடு பற்றியே முன்னர்க் கூறும் சீலங்களும் வேறுபடும். அவையிற்றை முன்னர்க் கூறுமாற்றால் உணர்ந்து கொள்ளலாம்.

இனி வைகறைத் தியானம் முதலிய சிலவற்றைத் தொகுத்தெடுத்துச் சிவபூஜாஸ்தவத்தில் ஸ்ரீஞானசம்பு சிவாசாரியர் கூறியருளிய சுலோகத்தையும் அதன் மொழிபெயர்ப்பையும் ஈண்டுத் தருகின்றாம்.

प्रातश्शङ्करचिन्तनस्नपनसंसेकासुसंरोधनै
स्सन्ध्यासंस्मृतिमार्जनाघशमनोपस्थानसन्तर्पणैः ॥
द्वारस्थार्चनयागधामगतविघ्नोद्वासनाद्यैः प्रभो
यश्श्रीमान् यजनं करोति भवतस्तस्यैव सिद्धिद्वयम् ॥

*சீரியல்வை கறைச்சிவசிந் தனைநீர்தீ மநுவாற்*
*றிகழ்நானம் வளிநிறுத்தல் சந்தியையை நினைதல்*
*வரியன்மார்ச் சனமகத்தைச் சமனஞ்செய் திடுத*
*லிலங்குமுபத் தானமொடு தருப்பணஞ்செய் திடுதல்*
*நேரியனற் றுவாரபூ சனைபூசை யிடத்தி*
*னிகழுமிடை யூறகற்றன் முதலியவற் றாலே*
*நாரியனற் பரசிவபூ சனைதனையெச் செல்வ*
*னடத்திடும் பயனிரண்டு நண்ணியிடு மவனே.*

ஆல் உருபையும் திகழ்நானம், என்பதையும் நீர்தீ என்பவற்றோடும் கூட்டி, நீரால் திகழ்நானம் தீயாஷ் திகழ்நானம் மநுவால் திகழ்நானம் என உரைத்துக் கொள்க. இவை முறையே வாருணஸ்நானம், ஆக்நேயஸ்நானம், மந்திரஸ்நானம் எனப்படும். மநு=மந்திரம். வளிநிறுத்தல்=பிராணாயாமஞ் செய்தல். அதனால் மானசஸ்நானம் பெறப்படும். சந்தியை நினைதல்=சந்தியாத் தியானம். மார்ச்சனம் அநுட்டானக் கிரியைகளுள் ஒன்று. அது சங்கிதை மந்திரத்தால் சிவதீர்த்தத்தைச் சிரசிற்றெளித்தல். அகத்தைச் சமனஞ் செய்திடுதல் அகமர்ஷணம். அதுவும், உபத்தானமுதலியனவும் [illegible]த்துவ வியாக்கியான முதலியவற்றுட் காணற்பாலன. பயனிரண்டு=போகமும் வீடும். (வரும்)

# பத்தித் தனித் தெப்பம்

[திரு. R. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள், சென்னை.]

(137-ம் பக்கத்தொடர்ச்சி)

பௌத்தர்கள் தங்கள் சமயத்தில் முடிந்த நிலையை நிருவாணநிலை என்றனர். அதனையடைதல் பழுதிலா வாழ்க்கையால்தான் என்பது அவர்கள் துணிபு. பழுதிலாவாழ்க்கையாவது நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர்சங்கம் இவைகளைத் தலைப்படுவதாகும். இதனை விசுத்திமார்க்கம் என்பர். இவைகளில் சரிப்போர்க்கு மூன்று குணங்கள் பொருந்துதல் வேண்டும். அவை சீலம், சமாதி, பிரஞ்ஞை யென்பன. சீலமாவது விலக்கியன வொழித்து விதித்தன புரிதல். சமாதி என்பது மனத்தை ஒருமுகப் படுத்துதல். பிரஞ்ஞை யென்பது மெஞ்ஞானம். இவை பெற்றபின்பு நிருவாணமடைதலாகும். இவற்றைப் பெறுதற்கு ஏகாந்தமாக இருந்து தியானஞ்செய்துகொண்டிருக்கவேண்டும். சித்தத்தை விரியவிடாது நன்றாக அடக்கப் பழகுதல் வேண்டும். மனத்தை அடக்கும் முயற்சியே பெருஞ் சாதனமாக அவர்கட்கு விளங்கிற்று.

சமணர்கள் கொண்ட சாதனம் மற்றொன்றாகும். அவர்கள் வீட்டுலகு அடைதற்கு ஞானம், காட்சி, ஒழுக்கம் என்னும் மூன்றும் பெறவேண்டும் என்பர். எரிந்த நெருப்பு, மிகவளர்ந்த இருவினையாகிய மரத்தினை நிரைத்துச் சுட்டுவிட, அவ்விருவினை தாம்நெடுங்காலம் பயின்றிருந்த உயிரினைக் கைவிடுதல் வீடெனப்படும். பின்னர் கடையிலாவறிவு, காட்சி, வீரியம், அளவில் சுகங்களைப்பெற்று வீட்டுலகில் விண்ணோர் தொழ

வாழ்வர். ஒழுக்கநிலை நிற்பதேகடனாக்கொண்டு பல்வகை விரதங்களால் உடலை வாட்டினர். தலைபறித்தல், சுடு பாறையிற்கிடத்தல், உணவின்றிருத்தல் முதலியன அவர்களது தலையாய விரதங்களாம்.

பௌத்தர்கள் தியானத்தையும், சமணர்கள் விரதத்தையும் சாதனமாகக் கைக்கொண்டன ரென் றறிகின்றோம். தியானம் என்பது ஒருவினை. அது புலன்களை யொடுக்கவும், மனம் ஒன்றவும் செய்வது. அதனைச் செய்வோன் தியானிப்பவன் எனப் படுவான். தியானிப்பவன் யாதானும் ஒரு பொருள் பற்றித் தியானிக்கவேண்டும். அப்பொருள் தியானிக்கப் படும் பொருளாகும். பௌத்தர்கள் தியானிப்பது பழுதிலா வாழ்க்கையே யாதலின் அவ்வாழ்க்கைதான் கைகூடும். அதனிடம் கடந்து நிற்கும் இறைவன்நிலை கூடாது. இறைவன துண்மை அவர்கட்கு உடன் பாடின்மையான் அவர்கள் நோக்கம் இறைவன்பாற் பழுதுபட்டது. உலகப்பற்றை யொழித்தற்குப் பழுதிலா வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டனர். அப் பற்றினை யறவே அறுத்தற்குப் பத்திநெறியைத் திருஞானசம்பந்தர் உணர்த்தினர். சிவபெருமான் திருவடியை இடையறாது நினைத்தலே பாசவிடுதலைக்கு ஏதுவாகுமென்று அவர்கண்டருளினர்.

பலவும் பயனுள்ளன பற்று மொழிந்தோம்
கலவம் மயில் காமுறு பேடையொடாடிக்
குலவும் பொழில் சூழ்ந்த குரங்கணின்முட்டம்
நிலவும் பெருமானடி நித்தல் நினைந்தே

சித்தமதொண்டிச் செய்கழலுன்னிச் சிவனென்று
நித்தலுமேத்தத் தொல்வினை நம்மேனி ல்லாவே

எனவரும் ஆளுடையபிள்ளையார் திருவாக்குக்கள் அக் கருத்தை வலியுறுத்துகின்றன. இறைவனை யோவாது நினைப்பது தியானமாம்.

பௌத்தர்கள் இங்ஙனம் இறைவனை நினையாது பாழ்பட நிற்க, சமணர்கள் விரதங்களே சரதமாகக் கொண்டொழுகினர். தலைபறித்தலே சுகமென்பர். அஃதே அவர்களுக்குத் தவம். இவர்கள் கொள்கைகளை அறிவிக்கும் முறையாகத் திருஞானசம்பந்த சுவாமிகள் "**தலைபறி செய்து தவமுயல்பவர்**" என்றருளினர். இவ் விரதம் தவமேயாயினும் ஊனைவாட்டுதல் அதன் செயலாம். ஊனினை வாட்டுதலால் வரும் பயன் யாதொன்றுமில்லை. பற்று நீங்குதற்கும் இன்பநிலை கூடுதற்கும் அது சாதனமன்று. மனவெழுச்சி இறைவன்பால் கூடுதற்குச் சிறந்த துணையாகாது. இன்பவடிவனை இறைவனைச் சிந்தித்து வழிபடப் பாசம் நீங்கிச் சிவப்பேறு பெறுதல் ஒருதலை. வழி பாட்டுமுறையே உண்மைத்தவமாகும். திருஞான சம்பந்தசுவாமிகளும்,

கொய்துபத்தர் மலரும் புனலுங்கொடு தூவித் துதிசெய்து
மெய்தவத்தின் முயல்வாருயர் வானக மெய்தும் புகலூரே

என உண்மைத் தவத்தின் செயலை விளக்கியருளினர். மேலும் விரதங்கள் ஞானத்தைத் தருஞ்செயலற்றன. இறைவன் வழிபாடே வீடும் ஞானமுந் தருமியல் புடையது.

வீடு ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடி ஞானமென் னவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞான சம்பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம் வல்லார் அடிசேர்வது ஞானமே

எனவரும் திருவலஞ்சுழித் திருக்கடைக்காப்பு திரு ஞானசம்பந்தரது உள்ளக்கிடக்கையைப் புலப்படுத்து கின்றது. வழிபாடு என்பது இறைவன் விரும்பும் பூசனையாம். "எண்ணிலாகம மியம்பிய இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" என வுணர்த்தப் படுகிறது. 'மலைமகள் பூசை மகிழ்ந்தருளும் பரமர்' என்றும், 'திருமாலால் பூசனைகளுகப்பானை' என்றும் அப்பரடிகள் அருளிச்செய்கின்றார்.

பூசனை முறைகள் ஆகமங்களில் விளக்கப் பட்டுள்ளன. ஆகமங்கள் சிவபெருமானது திருவாக்குக் களாயினமையால், இறைவன் 'ஆகமச் செல்வனார்' என்றழைக்கப்படுகின்றனர்.

தோகையம் பீலிகொள்வார் துவர்க் கூறைகள் போர்த்துழல்வார்
ஆகம செல்வனாரை யலர் தூற்றுதல் காரணமா

எனத் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரங் காண்க. இத்திருப்பாட்டு பௌத்தர், சமணர்களை வேறு பிரித்துக்காட்டி இறைவன் ஆகமங்களில் குறிக்கப் படும் பூசனை யேற்கும் பெருமானென்று அறிவிக் கின்றது. பூசனைகள் யாவும் அன்பினாலே சிவபெருமான் பிரகாசமாய் நிற்பதாகிய குறிகள் நிறுவப்பட்ட திருக் கோயில்களில் நிகழ்த்தப் பெறுபவை. இவ்வழி பாட்டிற்கெல்லாம் அன்பே அடிப்படை. மிகுந்த வேட்கையுள்ள நிலை வேண்டுமென்று கவுணியக் கன்றாகிய காழி வேந்தர்

* * * * நல்லூர்ப் பெருமானைத்
தாகம் புகுந் தண்மித் தாள்கடொழுந் தொண்டர்

என்றருளினர். இங்குத் 'தாகம்புகுந்து' என்பது நீர் வேட்கை யுடையான் நீரினை விரைந்துதேடிப் பருகுதல் போன்று அன்பின் வேட்கையில் நின்றவனைக் குறித்தது. அத்தகையன்புடையாரைத் திருஞான சம்பந்தர் அறைகூவி யழைத்துச் சிவபெருமான் திருக் கோயில்களில் வழிபடும் முறையை நடத்திக்காட்டினர்.

வம்மின் னடியீர் நாண்மலரிட்டுத் தொழுதுய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய் தீசன்னுறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள் கெண்டித் திசையெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல் வீழிம்மி ழலையே

எனவரும் அவரது தேவாரம் நன்குவிளக்கும்.

(வரும்)

குருபாதம்

# பிள்ளைகண்ட கள்வன்

[வித்துவான், திரு. அருணைவடிவேலு முதலியார் அவர்கள், காஞ்சிபுரம்.]

கள்வன் எனக் கேட்டவுடன் அவன் கரந்து போதற்றன்மை யுடையானென அறிந்து அவனைக் கையுறப் பிடிக்க விரைந்து செல்லுதலும், அங்ஙனம் பிடித்தாரை வியத்தலும், அவர் பிடித்தவாற்றினைக் கேட்க விழைதலும் உலகத்து இயற்கை. அதனால், எப்பெருந் திறலினோர்க்கும் அகப்படாது நின்ற கள்வனொருவனை ஒரு சிறுபிள்ளை கண்டு காட்டியவாற்றினை ஈண்டுச் சிறிது காண்போம்.

சோழ நாட்டிலுள்ள கழுமல மென்னும் மூதூரின் கண், மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையராய், அரவணியுஞ் சடைமுடியா ரடியலா லறியாது பரவு திருநீற்றன்பு பாலிக்குந் தன்மையராய், விரவு மறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவி யிருந்தோ ராகிய சிவபாதவிருதயர் பகவதியார் என்னும் இருவர்க்கும் அருந்தவப் புதல்வராய் ஓர் இளைய பிள்ளையார் தோன்றி வளர்ந்து வந்தார். அவர் இரண்டாண்டு நிரம்பி மூன்றாமாண்டினை எய்தியபோது ஒருநாள், அம்மூதூரின்கண் உள்ள திருக்கோயில் திருக்குளத்துக்கு நீராடச் சென்ற தம் தந்தையாரோடு அவர் மறுப்பவும் நில்லாது உடன்சென்று அவர் குளத்தில் இறங்கிய காலத்து அவர் இருத்தியவாறே பிள்ளையார் கரையில் இருந்தார். சிவபாதவிருதயர் நீராடித் தம் கடப்பாடு முடித்தற்பொருட்டுச் சிறிது நேரம் நீருள் மூழ்கியிருந்தார். பிள்ளையார் அவரைக் காணாமையே முன்னிலையாக அழத்தொடங்கினர். அப்பொழுது சுற்றுமுற்றும் பார்த்து அழுகின்றவர் திருக்கோயிலின் திருத்தோணிச் சிகரத்தினைப் பார்த்து, அம்மே! அப்பா!

அம்மே!! அப்பா!! எனப்பன்முறை அழைத்தழைத்து அழுதார். உடனே அத்திருத்தோணியில் வீற்றிருந் தருளும் தோணியப்பர் இறைவியாரோடும் விடையின் மேல் எழுந்தருளிவந்து இறைவியாரது திருமுலை யினின்றும் சுரந்து பொழிகின்ற பாலினைப் பொற் கிண்ணத்திற் கறந்து பிள்ளையார்க்கு ஊட்டுக என்றருள, அம்மையாரும் அவ்வாறே கறந்தருளிச் சிவஞானத் தைக் குழைத்து 'உண்' என்று ஊட்ட, இறைவர் அப் பொற்கிண்ணத்தைப் பிள்ளையார் கையிலே கொடுத்துக் கண்ணீர் துடைத்து அவரை அழுகை தீர்த்தருளினர். அப்பாலினையுண்ட பிள்ளையார் அப்பொழுதே எல்லா நூலுணர்வும் ஓதாதுணரப்பெற்று, மெய்யுணர்வினையும் அடைந்து, உள்ளம் நெக்குருக அவன்வசப்பட்டு, ஆராவின்ப அருங் கடலுட்டிளைத்து, அம்மையாரால் ஆட்கொள்ளப் பெற்றமையால் ஆளுடைய பிள்ளையா ராய்ச் சிவஞானமடைந்து சிவஞானசம்பந்தருமாயினர்.

அந்நிலையில் நீராடிக் கடமைகளை முடித்துக் கரை யேறிய சிவபாத விருதயர் பிள்ளையாரைக் கண்டு, 'யாரளித்த பாலடிசில் உண்டது நீ' என வெகுண்டு 'எச்சில் மயங்கிட உனக்கு ஈது இட்டாரைக் காட்டு' என்று கையின்கண் சிறியதொரு மாறுகொண்டு ஓங்கி நிற்ப, தம்வச மழிந்து பரவசமுற்றுநின்ற பிள்ளை யார், ஆனந்தக் கண்ணீர் சொரிந்து வலக்காலைச் சிறிதே யெடுத்து வலக்கையை உச்சியின்மேல் எடுத்து ஒரு திருவிரலாற் சுட்டி, உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால் செம்மை பெற எடுத்த திருத் தோடுடைய செவியன் என்னும் மெய்ம்மை மொழித் திருப்பதிகத்தால் இறைவனை அடை யாளங்களுடன், ''என் உள்ளங்கவர் கள்வன் இவனன்றே' எனக்காட்டியருளினர். அதனைக்கண்ட அவரது தந்தையாரும் கேள்வியுற்ற பிறரும் 'இப்படி யொப்பதோ ரற்புதம் எங்குளது!' எனப் பிள்ளையாரைச் சூழ்ந்து போற்றினர்கள்.

அத்திருப்பதிகத்தினுள் பிள்ளையார் இறைவனைக் கள்வனென்று அருளியது அவன் தமது உள்ளத்தைக் கவர்ந்து கொண்டமையால் என்பது வெளிப்படை. கள்வன் என்னுஞ்சொல் ஒத்த அன்புடைய தலைவன் தலைவியர் என்னும் இருவருள் தலைவி தலைவனைக் கூறுங் கூற்றிற்கு உரியதாம். அது, 'யாருமில்லைத் தானே கள்வன்' (குறுந்தொகை 25) 'நகைக் கூட்டஞ் செய்தானக் கள்வன் மகன்' (கலித்தொகை 51) என்றற் றொடக்கத்து அகத்திணைப் பாடற் பகுதிகளால் உணர்க.

தலைவி தலைவனைக் கள்வனென்று கூறுதல், அவன், ஒருவரும் இல்லாவிடத்தே தன்முன் தோன்றித் தனது எழிலுருவத்தினாலும், இனிய மொழியினாலும், மெய்தொட்டுப் பயிறல் வளைமுன்கை பற்றல் முதலிய தொழில்களினாலும், நாணென்னுந் தாழ்வீழ்த்தப்பட்ட நிறையென்னுங் கதவினை உடைத்துத் தன்னகத்தே யுள்ள நெஞ்சினைத் தன்னையும் அறியாமற் கவர்ந்து கொள்ளுதல் பற்றியாம். அவ்வாறே பிள்ளையாரும் ஒருவரும் இல்லாவிடத்தே தமக்குமுன் தோன்றித் தனது அருளுருவத்தினாலும், அருண்மொழியினாலும், பாலுண்பித்தல் கண்ணீர் துடைத்தலாகிய அருட் செயல்களாலும், உலகியலென்னுந் தாழ்வீழ்த்தப் பட்ட தன் முனைப்பென்னுங் கதவினை உடைத்துத் தம் உள்ளத்தைத் தம்மையு மறியாமற் கவர்ந்து கொண்ட இறைவனைக் கள்வனென்றருளினார். எனவே, இறைவன் தலைவனாகப் பிள்ளையார் அத்தலைவனைக் கூடியின்புற்ற தலைவியாயினார் என்பது பெறப்பட்டது. அப்பொருள் பயத்தற் பொருட்டே பிள்ளையார் அத் திருப்பதிகத்தினை அகத்திணையின்பாற்படுத்து அருளிச் செய்தாரென்க. அத்திருப்பதிகம் அகத்திணையின் பாற் படுத்து அருளிச் செய்யப்பட்டதென்பது, 'ஏர் பரந்த இனவெள்வளை சோர என் உள்ளங் கவர் கள்வன்' என்றருளிய வாற்றான் விளங்குதல் காண்க.

இனி இறைவன் காண்டற்கரியனாய் நிற்றல் பற்றியும் 'கள்வன்' எனப்படுவன். எனவே, கள்வன் என்னுஞ் சொல் இறைவனைக் குறிக்குங்கால் அரும் பொருள் பலவற்றிற்கு உறைவிடமாய் நிற்குமென்பது உணர்க. அதனாலன்றோ அச்சொல் திருமுறைகளின் மட்டுமன்றிக், 'கள்ளரோ டில்ல முடையார் கலந்திடில்' (திருவுந்தியார். 23.) எனவும், 'உள்ளத்தின் கண்ணாய கள்வன்' (சிவஞானபோதம். சூ. 9. அதி. 1.) எனவும் சாத்திரங்களிலும் ஆளப்படுவதாயிற்று. இறைவன் காண்டற் கருமையாய் கள்வனாதலை மணிவாசகப் பெருமான் திருவாசகத்துள் திருவண்டப்பகுதியில் சொற்சுவை பொருட்சுவை ததும்ப மிக அழகுபடக் கூறியுள்ளார். அது,

"மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறு மின்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலின்
றாடளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்

பற்றுமி னென்றவர் பற்றுமுற் றெளித்தும்"

எனவரும்

இதனுள் 'திசைமுகன் சென்று தேடுதல், முறை யுளியொற்றுதல், மறைத்திற நோக்கி வருந்துதல், தந் திரத்திற் காண்டல்' எனவும், 'முனிவற நோக்கி நனிவரக் கௌவி, ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து வாணுதற் பெண்ணென ஒளித்தல்' என்பதும், கவர் பொருளுடையனவாய் முறையே கள்வனைத்தேடுவார் செயலையும், கள்வன் செயலையும் குறித்து நிற்றல் காண்க. (திசை = திக்கு. ஒற்றுதல் = ஒற்றிருந் தாராய்தல். மறை = களவுநூல். தந்திரம் = சூழ்ச்சி என வேறு பொருள்படும்) இங்குக் கள்வன் செயலைக் கூறும் பகுதியினை நோக்குங்கால் "தூதர் கோலத்து வாயிலி னிருந்து, மாதர் கோலத்து வல்லிருட் புக்கு" என்ற சிலப்பதிகார அடிகள் நினைக்கற்பாலன.

இவரெல்லாம் யாம் அக்கள்வனை இவ்விவ்வாற்றாற் காண்பேம் என முனைப்புக்கொண்டு எழுந்தாராகலான் அவன் அவர்க்கெல்லாம் அகப்படாது ஒளித்து நின் றான். பிள்ளையார் அவ்வாறின்றி அழுதழைத்தாராக லான் அவர்க்கு அவன் தானே வெளிப்பட்டு நின்றான். மணிவாசகப் பெருமானும் 'அழுதால் உன்னைப் பெற லாமே' என்றருளியது காண்க. எத்துணைப் பெருந் திறலினோர்க்கும் அகப்படாது ஒளித்துநின்ற கள்வன் மூன்றாண்டும் நிரம்பப்பெறாத ஓர் இளங்குழவி கண்டு அடையாளங்களுடன் காட்டியது வியப்பினும் வியப் பன்றோ!

இதனால் இறைவன் தன்முனைப்பால் காணலுறு வார்க்கு அரியனாயும் அவனருள் வழிநின்று அன்பால் நோக்குவார்க்கு எளியனாயும் நிற்பன் என்பதும், அவ் வாறு அவனைக்காணுமாற்றினைக் காட்டியருளியவர் பிள் ளையார் என்பதும் இனிது விளங்கும். எனவே, உயிர்

தொறும் ஒளித்துநின்ற அவ்விறைவனாகிய கள்வனைக் காணவேண்டினோர், ஆளுடைய பிள்ளையாரது அருளொளி விளங்கும் மழவிளந் திருவுருவத்தினைச் சிறிதே எடுத்த வலத்திருத்தாளும், இடக்கையிற் பொற்கிண்ணமும், உயரவெடுத்த வலத்திருக்கையும், பாலரூப் பதிகச் செவ்வாயும், நிலத்தே தந்தையாரையும், வானத்தே இறைவனையும் நோக்கும் திருக்கண் நோக்கமும், சுட்டி அசையும் நெற்றியும், திருவருள் விளங்குந் திருமுக மண்டலமுமாக உன்னித், "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தினை உணர்ந்துணர்ந்து ஓதுதல் வேண்டும். அவ்வாறு உணர்ந்து ஓதுவார்க்கு அவன் எளிதின் வெளிப்பட்டருள் செய்வன். இவ்வாறு உலகத்தினர் தன்னை அடைதற்குப் பதிகப் பெருவழிகாட்டுதற் பொருட்டே இறைவன் தன்னை மறக்குமாறில்லாத அவரை மையல்செய்து மண்ணின்மேற் பிறக்குமாறு காட்டி மண்டுதவ மறைக் குலத்தோர் தன்னை அருண் மகப்பேறு கருதி வழிபட்ட வழிபாட்டின் பயனாக அளித்தருள வந்தவர் பிள்ளையாரென்க. அதனாலன்றோ எத்துணை முதியோரும் எய்துதற்கரிய இறைவனை அத்துணை இளமையே எய்தி, எய்தியதொன்றே பிறரும் அவனை எய்துதற்கு வழிகாட்டுவாராயினரென்க.

---

உலகத்திலே ஒவ்வொரு செயலுக்கும் காரணம் மூன்றுள்ளன என்பதைக் கண்கூடாக அறியலாம். மட்கலங்களுக்கு முதற்காரணம் மண்; துணைக்காரணம் திரிகை முதலாயின; நிமித்த காரணம் குயவன். அது போலச் சடவுலக முண்டாதற்கு மாயை முதற்காரணம். இறைவனது ஆற்றல் துணைக்காரணம். இறைவன் நிமித்த காரணம் எனக்கொள்க.

—சிவஞான சித்தியார்.

குருபாதம்

# தேவாரப் பண்கள்

[ திரு. S. இராமலிங்க ஓதுவார் அவர்கள், சிதம்பரம். ]

உலகம் உய்யவும், சைவம் நின்றோங்கவும் தெய்வத் திருவருளால் திருவவதாரம் செய்தருளிய சைவசமய பரமாசாரியர்களாகிய பேரருளாளர்கள் அருளிச் செய்த தமிழ் வேதமாகிய தேவாரம் உலகில் விளங்கி ஒடுங்கி வெளிப்பட்ட ஞான்று இராஜராஜ அபயகுல சேகர சோழமகாராஜா தேவாரப்பாசுரத்திற்குப் பண் அடைவு செய்வதெப்படியென்று ஐயுற்றகாலை அசரீரியின் திருவருளால் வழியுணர்ந்து திருநீலகண்ட யாழ்ப்பாணர்மரபில்வந்த ஓர் பெண் மணியை ஸ்ரீ நடராஜர் திருச்சன்னிதிக்கு அழைத்துவந்து பண்முறைகளைப் பாடுவித்துக் கேட்டு உளமகிழ்ந்தார். அன்று முதல் இன்றுவரை சிவாலயங்களிலும் சைவா தீனங்களிலும் பரம்பரையாக அப்பண்முறை வழங்கி வருகின்றது. அப்பரம்பரை ஆசிரியர்களாகிய ஓதுவா மூர்த்திகளிடம் அம்முறையே கற்றவர்கள் பண்டைய மரபின்படியே மாறுபடாது ஓதிவருகின்றார்கள். உலக நிலையில் காலசக்கரத்தின் கையில் அகப்பட்ட கலை யுணர்ச்சி யெல்லாம் மாறிவருவது யாவரும் அறிந்ததே. இம்மைப்பயன் தருவனவாகிய யாவும் மாறிவரினும் மெய்ம்மைப்பயன் தரும் அருட்கலை யுணர்வு மாறுபடின் குறித்த பயனைத் தாராது என்பது தொல்லோர் துணிபு ஆதலின் திருவருளால் வந்த தேவாரப் பண் ஓதுமுறை நெறிகள் காலவயப்பட்டுக் கலங்காது நிலை பெற வேண்டுமென விருப்புற்று இருந்தேன்.

மேலைச்சிதம்பரமாகிய திருப்பேரூர் பங்குனி உத்திரத் திருவிழாவுக்குத் தேவார பாராயணத்திற்கு எங்களைவர அழைக்கும் கோவை சிவக்கவிமணி சைவத் திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்

களிடம் தேவாரப் பண்முறைகளின் பாகுபாட்டையும் ஓதும் முறைகளையும் தெரிவித்தேன். அவைகளைக் கேட்டு அவர்கள் நீங்கள் செய்துவரும் பண்முறை ஆராய்ச்சி நன்றாயிருக்கின்றது. மிக அவசியம் வெளியிடவேண்டிய காரியமென்று சொல்லி நானே முதலில் பாராயணம் செய்யும் முறையை வெளியிடுகிறேன் என்று அவ்வாண்டு அவ்வூர் உற்சவப்பத்திரிகையிலும் பகற்பண் இராப்பண் பொதுப்பண் என்பவைகளைப் பத்துத் தினங்களிலும் அவ்வக் காலங்களில் எல்லாப் பண்களும் பொருந்தக் கட்டளை பேதங்கள் முழுவதும் ஓதப்பெற்று வருகின்றது என்றெழுதி யிருக்கிறார்கள். அதன்படியே பேரூரில் பாராயணம் நடந்துவருகிறது. அவர்கள் விருப்பத்தின்படியும் எழுத முன்வந்தேன்.

அன்றியும் திருத்தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவரும் சைவஞானபானுவாகிய "ஞானசம்பந்தம்" சைவச் சார்பு பற்றிய உண்மை உணர்வினை உலகில் எங்கும் பரவச்செய்து வருதல் யாவரும் அறிந்ததே. ஆதலால் இப்பண்முறை பற்றிய ஆராய்ச்சியும் அதன் மூலம் வெளிவருவது மிகவும் பொருத்தமுடையதே என்றெண்ணினேன். இன்னும் அதோடு ஓர் தொடர்பும் உண்டு. அதாவது யான் எழுதும் பண்களின் விபரங்களும் அவ்வாதீனமரபு பற்றியவைகளேயாம். எவ்வாறெனின் அவை வருமாறு; தருமபுர ஆதீனத்தில் பண்டு தொட்டு ஓதிவந்த தேவாரப் பண்களை அவ்வாதீனத்தில் இருந்த ஓதுவா மூர்த்திகளிடம் 50 ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் ஆசிரியர் ஸ்ரீ நடராஜ ஓதுவா மூர்த்தியவர்கள் சென்று கற்றுக் கொண்டார்கள். அம்முறைப்படியே 1903ல் சிதம்பரம் ஸ்ரீமான் சி. பழநியப்ப முதலியார் அவர்களின் தேவாரப் பாடசாலையில் ஆசிரியராய் அமர்ந்து பண்முறைகளை மாணாக்கர்களுக்குக் கற்பித்து வந்தார்கள். அப்பாடசாலையில் நான் மூன்றாவது முறை வகுப்பிற் சேர்ந்து கற்றுக்கொண்டேன். அஃதன்றியும், எங்களாசிரியர்

அப்பாடசாலை அறிக்கைப் புத்தகத்திலும் "தருமபுர ஆதீன ஓதுவாமூர்த்திகள் ஓதிவந்த பண்முறைப்படி இங்கே தேவாரம் கற்பிக்கப்படுகிறது" என்று எழுதியிருக்கிறார்கள் ஆதலாலும், அவர்களுக்குப் பின்னர் யான் அப்பாடசாலையில் ஆசிரியனாக இருந்துகொண்டு அப்பண் முறைகளையே கற்பித்து வருகிறேன் ஆதலாலும் இடையீடின்றி 40 வருஷகாலம் ஒரே முறைமையாக அப்பாடசாலை நடந்து வருவதாலும் தருமை ஆதீனப் பண்முறையே எங்கள் பாடசாலையின் பண்முறை என்று விளக்கமுற்றது. இவையே தொடர்பாகும்.

எங்கள் பாடசாலையில் வந்து கற்றுத்தேறிய மாணாக்கர்களில் பெரும்பான்மையோர் பெருந்தானங்களில் ஓதுவாமூர்த்திகளாயும் ஆசிரியர்களாயும் இருந்து வருகிறார்கள். அவர்கள் இம்முறைகளைச் சரிதான் என்று ஏற்றுக்கொள்வார்கள். இம்முறையே பாடவும் வல்லவர்கள். ஆதலின் இக்கட்டுரை அட்டவணை இதனில் வெளிவருதல் மிகவும் பொருத்த முடையதேயாம் என்றெண்ணி இதனை இங்கே எழுதுகின்றேன். பண் என்னும் சொல்லின் பொருள்யாது என்னும் விபரமும் பிறவும் பின்னர் வரும்.

(வரும்)

---

பித்தங் கொண்ட நாவிற்குப் பால் கைக்கும், அதனைத் தவிர்ந்தபின், பால் தித்திக்கும். மலப்பிணிப்புள்ள காலை, மறைப்பாய் நின்ற இறைவனதாற்றல், மலம் நீங்கிய காலை இனிய அருளாய் விளங்கும்.

—திருவருட் பயன்.

சிவமயம்

# திருவுந்தியார் உரைநடை

[காஞ்சிபுரம், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B. A., L. T.]

(143ம் பக்கத்தொடர்ச்சி)

## 17, 18, 19, 20 உந்திகள் *

இவற்றான் நிராதாரயோகத்தினின்றார் மீதானத்தே செல்லுமாறு வகுத்துணர்த்துகின்றார்:-

பொழிப்பு:- மேற்கூறியபடி ஒன்றோடுந் தழுவாமல் நிற்பின், முதல்வன்றிருவடியிற்பூணுஞ் திருச்சிலம்பென உருவகிக்கப்படும் பரவிந்துவினென்றெழும் பரநாதங் கேட்கும்; அதன் வழியே சென்று ஞான நடம் நவிலும் அம்மையப்பர் நேர்படக்கண்டு கும்பிட்டுநிற்க. (17)

(நிருத்தனைக் கும்பிட்டு நிற்றலாவது அவனருளை யுணர்ந்து நிற்றலேயாகலின்) 'அவ்வருளை மறவற்க. இந்நிலையின் முதிர்ச்சியால், அறியப்படுபொருளாகிய அருள் ஏனை அறிவான், அறிவு என்பவற்றைத் தன் னுள்ளடக்கிநின்று தானென்றே புலனாகாநிற்கும்.

---

* திருச்சிலம் போசை யொலிவழி யேசென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட வங்கேநின் றுந்தீபற. 17

மருளுந் தெருளு மறக்கு மவன்க
ணருளை மறவாதே யுந்தீபற
வதுவேயிங் குள்ளதென் றுந்தீபற. 18

கருது வதன்முன் கருத்தழியப் பாயு
மொருமகள் கேள்வனென் றுந்தீபற
வுன்ன வரியனென் றுந்தீபற. 19

இரவுபக லில்லா வின்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீபற
விரைய விரையநின் றுந்தீபற. 20

(அதுவே இங்குள்ளது என்பதன் பொருள்). நிற்பின் திரியக்காணும் உணர்வாகிய அவிச்சையும், அதுபற்றி யுளதாகும் 'யான் செய்தேன் பிறர் செய்தார்' என மதிக்கும் யான் எனது என்னும் இருவகைப் பற்றும் நீங்கும். நீங்கவே அவை காரணமாகவரும் வினையின் நீங்குவாய். (18)

குறிப்பு:- இதனால் 'ஏகனுகி இறைபணி நிற்றல்' எனச் சிவஞானபோதத்தின்கண் அருளிச்செய்யப்படும் தூரிய அநுணிலை எனப்படும் சிவயோகம் கூறப்பட்டது. "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தரு நோய்" என்னும் வெண்பாவான் விளக்கியருளியது ஈண்டுச் சிந்திக்கற்பாற்று. சார்பு கெடுதல் = ஏகனுதல். சார்புகெட வொழுகல் = ஏகனுகி யிறைபணி நிற்றல்.

இச் சிவயோகத்தில் ஆன்மா அருளால் நிற்குங்கால் 'அருளுக்கு' முதலாகிய 'சிவம்' தோன்றும். அதனைப் பொருந்தித் தானென்றொரு முதல் தோன்ருமல் இரண்டறக்கலந்து நிற்றலே 'சிவபோகம்' எனப்படும் 'சமாதிப்பர முத்திநிலை'. இதனை மேல்வரும் இரண்டு உந்திகளால் கூறுகின்ருர்:—

பொழிப்பு:- 'அகம், புறம் என்னும் கருவிகளின் துணைகொண்டு நடைபெறும் அறிவிற்கு ஒருவாற்ருனும் புலனுகாத ஒருமகள் கேள்வன், அக்கருவிகளினீங்கி ஒன்றையுங் கருதுதலின்றி மேற்கூறிய சிவயோக நிலையின் நிற்பின், அக்கருத்தின்கண் அதனைத் தன் வயப்படுத்து விளங்கித் தோன்றுவன். (19)

வேருச் சுட்டியுணரப்படுவதும் அன்ருய், ஒருவாற்ருனும் உணரப்படாததுமன்ருய் (இரவு பகலில்லா), உடனுய் நின்றுணரப்படுவதாயுள்ள நிலைப்பட்ட மெய்யுணர்வாகிய வெளியில் விளையும் பேரின்பமாகிய சிவபோகத்தை அன்பு மீதூர்ந்து அநுபவித்து நிலையதுவேயாகி நிற்க. (20)

குறிப்பு:- *17, 18, 19, 20*-ஆம் உந்திகளின் கருத்தை விளக்குவன "ஓசையெலா மற்றால்" என்பது முதலாக "உண்டெனி லுண்டாகும்" என்பது வரையுள்ள வெண்பாக்கள். [களிறு. 33 - 36.]

சிவஞானத்தின் பயன் ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, ஆன்மலாபம் என மூவகைப்படும். இவை மூன்றும் அதிபரிபக்குவ முடையார்க்குக் கேட்டல் மாத்திரையானே ஒருங்கு நிகழும். ஆகலின், அது பற்றி ஆன்மலாபமாகிய சிவப்பேறு கூடுமாற்றை இங்ஙனம் பொதுப்படக் கூறினர். இனி, அவை ஏனையோர்க்குக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் படிமுறையானன்றி நிகழாமையின், அவரை நோக்கிச் சிந்தித்தல் முதலாக மேல்வகுத்துக் கூறுகின்றார்.

*பாசிபடு குட்டத்திற் கல்லினைவிட் டெறியப்*
*படும்பொழுது நீங்கியது விடும்பொழுதிற் பாக்கு*
*மாசுபடு மலமாயை யருங்கன்ம மனைத்து*
*மானடியை யுணரும்போ தகலும்பி னணுகு*
*நேசமொடுந் திருவடிக்கீழ் நீங்காதே துங்கும்*
*நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே யாகி*
*யாசையொடு மங்குமிங்கு மாகியல மருவோ*
*ரரும்பாச மறுக்கும்வகை யருளின்வழி யுரைப்பாம்.*

என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தம் இக்கருத்துபற்றி எழுந்ததே.

(வரும்)

சதுர்வேத தாற்பரிய சங்கிரக
உரைச்சிறப்புப்பாயிரம்

कल्पान्ते शमितत्रिविक्रममहाकङ्कालबद्धस्फुर
च्छेषस्यूतनृसिंहपाणिनखरप्रोतादिकोलामिषः ।
विश्वैकार्णवताविहारमुदितौ यौ मत्स्यकूर्मावुभौ
कर्षन्धीवरतां गतोऽस्यतु सतां मोहं महाभैरवः ॥

—சிவலிங்கபூபதி.

(இதன் மொழிபெயர்ப்பு 186-ம் பக்கம் காண்க.)

குருபாதம்

# திருவைந்தெழுத்தின் பெருமை

[வித்துவான், திரு. G. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., B. L.,]

(147-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விதம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் திருவைந்தெழுத்தை ஓதுபவர்களுக்கு அவ்வைந் தெழுத்து 'ஆலைப்படு கரும்பின் சாறுபோல் அண்ணிக் கும்'. இவ்விதம் பத்தித்தனி வித்திட்டு ஆர்வத் தெண் ணீர் பாய்ச்சினால், அது பின்னர் அஞ்செழுத் தருங் காயாகி, சிவக்கனி நேரே சித்திக்கும் என்று பட்டினத் தடிகள் பரவசமெய்திப் பின்வருமாறு பாடுகின்றார்.

"அஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமுங் கண்ணொரு மூன்றுந்
தோளொரு நான்குஞ் சுடர்முக மைந்தும்
பவள நிறம்பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை யதனினு முறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருந்
தேனுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதினி தருந்திச்
செம்மாந்திருப்" போமென்றார்கள்.

இத்திருவைந்தெழுத்தை ஓதவேண்டிய காலம் * காலையும் மாலையுமாகும். இதைத் திருமூலர்,

"ஞாயிறு திங்கள் நவின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திர மாரும றிகிலர்
சேயுறு கண்ணி திருவெழுத் தஞ்சையும்
வாயுற வோதி வழுத்தலு மாமே"

* "அந்தியு நண்பகலு மஞ்சுபதஞ் சொல்லி" என்பது முதலாகவுந் திருமுறைகளில் காணப்படுதலின் ஏனையசந்தியா காலங்களும் கொள்ளற் பாலனவே.

என்றார். சூரியன் எழுவதற்கு முன்பும் அடைந்த பின்பும் ஆகாயத்தில் ஒருவித நுண்ணிய ஓசோன் (Ozone) என்னும் அருமையான ஆவி உலவுகிற தென்றும், அது மந்திரம் ஓதுவதற்கு வேண்டிய ஓர் ஒழுக்கத்தை உடம்பிற்கு அளித்து, அறிவைத் தெளிவு படுத்திக் கருத்தைக் கவியச் செய்கிறதென்றும் விஞ் ஞான நூல்வல்லார் கூறுகின்றனர். இக்காலவரை யறை பின்வரும் அப்பர் தேவாரத்தாலும் வலியுறு கின்றது.

> "துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
> அஞ்செழுத் தோதினாளு மரனடிக் கன்பதாகும்
> வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா வமணர்தந்த
> நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே."

இடரினுந் தளரினும், துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும், நலம் தீங்கிலும் திருவாளன் திருப்பெய ராகிய திருவைந்தெழுத்தைக் கரைந்துருகிக் கருத்தி விருத்தி, நாத்தழும்பேறக் காலையும் மாலையும் ஓதிவந் தால், அவ்வைந்தெழுத்தும் நமக்கு நற்றுணையாய் உற்றுழியுதவி, நாம் நடுங்கவருவதொரு நலிவுமெய் தாமல், சிவப்பேற்றை யடையலாமென்பது திண்ணம். இத்திருவைந்தெழுத்தையே புணையாகக்கொண்டு மனி தரில் தலையான மனிதராய் மன்னிவாழ்ந்து, தமக்கு இயைந்த இடர்களை எல்லாம் எள்ளி யெறிந்து, எம் பெருமான் கழல் அடைந்தவர் திருநாவுக்கரசர். அவர் தமக்கு எல்லா ஞானமும் கல்வியுமாய் நின்றது இவ் வைந்தெழுத்துமே என்று, நீற்றறையை இறைவன் திருவடி நீழலாக்கி அங்கு வீற்றிருந்து முழங்கும் வீறுப்பை அறியாத அடியாரும் உளரோ?

> "நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
> நமச்சி வாயவே நானறி விச்சையும்
> நமச்சி வாயவே நாவின்ற் றேத்துமே
> நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே."

இதனால் நீற்றறையை நீள் விசும்பாக்கியதும் அத்திருவைந்தெழுத்தே என்பது தெளிவாகும். இவ்விதம் அல்லும் பகலும் ஓதிப் பழகினால்மட்டுமே ஒருவன் இறக்குந்தறுவாயினும் அந்நாமத்தை மறவாது எண்ணமுடியும். ஒருவன் மரிக்கும்பொழுது எண்ணும் எண்ணமே அவனது மறுபிறப்பில் வந்து முன்நிற்கும் என்பது உண்மையாதலின் அப்பரடிகள் இறைவனை இரங்கி மன்றாடித்தான் உயிர் துறக்கும்பொழுது மறவாமல் திருவைந்தெழுத்தை உரைக்கும் பேறு கிடைக்கவேண்டும் என்று வேண்டுகிறார்.

"தூமென் மலர்க்கணை கோத்துத்தீ வேள்வி தொழிற்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடனாகைக் காரோணநின்
நாமம் பரவி நமச்சிவாய வென்னும் மஞ்செழுத்தும்
சாமன் றுரைக்கத் தருதிகண்டாய் எங்கள் சங்கரனே."

இன்னும் இத்திருவைந்தெழுத்தின் பெருமையை எல்லாம் என் போலியர் எடுத்துக் கூறுவது இயலாது. நந்திநாமமாய், உலகுக்கெலாம் திலகமாய், இயமன் தூதரும் அஞ்சுவதாய், வல்வினையைச் சிந்துவதாய், செல்வம் மல்குவிப்பதாய், நான்முகனும் திருமாலும் ஓதுவதாய், நங்களுக் கருங்கலமாய், நலமிகக் கொடுப்பதாய், நன்னெறியாவதாயிருப்பது திருவைந்தெழுத்தேயாகும். இதை மறவாது ஓதுதல் சிவநேசச் செல்வர் கடன். அப்பர் சுவாமிகளும், "நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே" என்றருளிச்செய்தார். குலச்சிறை நாயனார் பேணுஞ்சிவனடியாரியல்பைப் பாடிய திருஞானசம்பந்தரும், "நாவணங்கியல்பாம் அஞ்செழுத்தோதி," என்றருளினார். இறைவனை நாவால் வணங்குவது இவ்வைந்தெழுத்தை ஓதுவதேயாகும் என்பதே இதன் பொருள். வணங்கிய நாவினை யுடையவர்களே இத்திருவைந்தெழுத்தை ஓதும் இயல்புடையார் என்றுமாம். நுணங்கிய கேள்வியை யுடையவர்களே வணங்கிய நாவினராதல் கூடும். ஆகவே நுண்ணிய கேள்வியை யுடையவர்களே திருவைந்தெழுத்தை ஓதுபவராவர்.

அன்னவர்களே சிவனது சிறப்பியல்புகளை அறிந்து, மனமொடுங்கி, சிவாயநம வென்று ஓதிச் சிவனருள் பெறுவர். மனதை ஒடுக்குதல் அவசியம் வேண்டியதே என்பதை,

"வைத்த பொருணமக் காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ அறிவிலாப் பேதைநெஞ்சே."

என்னும் தேவாரத்தால் அறியலாம்.

அவ்விதம் தனக்குவமை யில்லாதான் தாளை ஒன்றிச் சேரும் நினைவுகொண்டு, சிவனது சிறப்பியலை யறிந்து சித்தமொருக்கிச் சிவாயநம என்னும் அறிவிலாதவர்களும், உலகவின்பத்திலேயே உழன்று திரிவோரும், பழிபாவங்களுக்கு அஞ்சாத பாதகருங் கூட சிவனது பொதுவியலை அறிந்தேனும் இத்திருவைந்தெழுத்தை ஓதிவந்தால் எல்லாத் தீங்குகளும் நீங்கப்பெற்று மனக்கவலை யொழிந்து மாண்பய னெய்தும் வாழ்க்கையராவர் என்பதைக் கீழ்வரும் தேவாரங்கள் தெளிவு படுத்தும்.

"சொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடில்
எல்லாத் தீங்கையு நீங்குவர் என்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே."

"ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்
பேத மின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே."

இத்தகைய சிவநாமத்தின் செம்மை நலமறியாத சிதடர்களும் உளரேல், அவர் எற்றிற் குரியர்? அத்தகையார் பயவாக் களரணையராய், வாளா மாய்ந்து மண்ணுகிக் கழியும் கயவரேயாவர்.

"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோவென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே."

இவ்விதம் உணர்தற் கரிதாயினும் ஓதற்கெளிய தாய திருவைந்தெழுத்தையும், அதன் உட்பொருளையும், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே ஞானகுரு நாதனாய்த் தோற்றியருளி உபதேசிக்கக்கேட்ட உத்த மர்களின் வழிவழித் தோன்றல்களாய், சைவ உலகைக் கரையேற்றக் கையுதவும் திருப்பெருமடாலயங்களின் தலைவர்களும், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத் தலைவராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசன்னிதானம் போன்ற பெரியோர்களுமே இவ்வைந்தெழுத்தின் அரும் பொருளைத் தீக்கை வாயிலாகப் போதிப்பதற் குரியராவர். அன்னார் குருபாதம் போற்றிக் குருவணக் கம் செய்து, சிவவிளக்கம் பெற்றுச் சிவநேசச் செல் வர்கள் உய்யுமாறு, கறைமிடறும் பிறைமுடியுமுடைய இறையடியை மனமார வழுத்துகின்றேன்.

---

ஊழியீற் றடங்கு நெடியவன் முதுகென்
புடனுறப் பிணித்தொளிர் பாம்பிற்
காழுறக் கோத்த மானுட மடங்கல்
கையுகி ராதியே னத்தின்
கோழியற் பிசிதங் குறுக்குறுத் துலகேழ்
குரைகடல் கொளம்கிழ்ந் துலவும்
வாழிமீ னமை வலைஞரி னீர்க்கும்
வடுகனீக் குகுகலோர் மயக்கே.

(மொழிபெயர்ப்பு)

குருபாதம்

# குரு ஞானசம்பந்தர்

[திரு. S. தண்டபாணி, தருமபுர ஆதீனப் பாடசாலை மாணவன்.]

(154-ம் பக்கத்தொடர்ச்சி)

ஞானசம்பந்தர் இறைவன் ஆணையைச் சிர மேற்கொண்டு சோமவாரதினத்தில் ஆலவாயை யகன்று ஆரூரை அடைந்தார். ஆரூரிலே கமலைஞானப் பிரகாசரும் சோமசுந்தரக்கடவுள் தம் கனவிற் றோன்றி அருள் பாலித்தபடியே நித்தியக் கடன்களை முடித்து, ஞானசம்பந்தர் வருகையை எதிர்பார்த்த வராய் தட்சிணாமூர்த்தி சந்நிதானத்தில் எழுந்தருளி இருந்தனர். ஞானசம்பந்தர் குருமூர்த்தியாக எழுந் தருளியிருக்கும் ஞானதேசிகரைக் கண்டார். கீழே விழுந்து பணிந்தார். தேசிகரும் அன்போடு தழுவி, இன்சொற்கூறி சந்நிதானத்திலே உட்கார வைத்துச் சிவஞானோபதேசம் செய்து சொக்கலிங்கத் தை எழுந்தருளப்பண்ணிக் கொடுத்தார். ஞானோப தேசம் பெற்ற ஞானசம்பந்தர், சிலநாள் அவ்விடத் திற்றானே தங்கி, குருபணிவிடைசெய்து வருநாளில் ஓர் நாள் குருமூர்த்தியோடு ஆலயத்திலிருந்து திரும்பிவருங் கால் கைவிளக்குக்காரன் தூங்கிவிட்டமையால் ஞான சம்பந்தர் தாமே அவ்விளக்கை எடுத்துக்கொண்டு குரு நாதனுக்கு முன் செல்வாராயினர். வீடுசென்றதும் குரு நாதர் ஞானசம்பந்தரை நிற்க எனப்பணித்து உட்சென்றனர். அன்றிரவோ விடாமழை பெய்தது. ஞானசம்பந்தரும் அவ்விடத்தை விட்டகன்றாரில்லை. பெய்தமழைகள் திருவருளினால் இவருடைய திருமேனி யில் சிறிதும்படாது, ஒருகஜ தூரம் வரையும் சுற்றிலும் கோடு கட்டினதுபோல் கீழ்ப் பூமியிலும் சலம் புகாமல் நின்றன. இவ்வதிசயத்தை விடியற்காலம் நீர்தெளிக்க

வந்த மகளிர்கள் கண்டார்கள். உள்ளே ஓடி குருநாதரிடம் தெரிவித்தார்கள்.

குருநாதர் உடனே எழுந்து வெளியே வந்து பார்த்துத் திருவருட் பெருமையை உணர்ந்து "குரு ஞானசம்பந்தா! உமது பெருமையை அறிந்தோம். நீர் குருநாதராயினீர். ஆதலால் தருமராசனாற் பூசிக்கப் பட்ட தருமபுரத்தை அடைந்து சைவசமய பரிபாலனஞ் செய்துகொண்டு ஞானபீடாதிபதியாய் எழுந்தருளியிருப் பீராக" என்று கட்டளையிட்டருளினர். குருஞானசம் பந்தர் தம் குருநாதன்மீது ஞானப்பிரகாசமாலை என்னும் ஓர் தோத்திரநூலை இயற்றி யருளினர். பின்னர் குரு வாணைப்படி தருமபுரமடைந்து மெய்கண்டசந்தான தேசிக பீடாதிபதியாய் எழுந்தருளி இருந்து சைவ சித்தாந்தச் செங்கோல் பெருக்கி சிவபோகசாரம், முத்திநிச்சயம், முதலிய பல ஞான அனுபவ நூல்களை அருளிச் செய்துவந்தனர்.

அங்குள்ள அகஸ்தியர் முதலிய முனிவர்களும் தங்களுடைய ஆசிரமங்களையும், சிவாலயத்தையும் குரு ஞானசம்பந்தரிடம் ஒப்புவித்துத் தத்தம் இருப்பிடஞ் சென்றனர். குருஞானசம்பந்தர் அடியார் கூட்டங் களைப் பாதுகாத்து, சிவாலயத்திருப்பணி, மகோற்சவம் முதலியன நடத்திக் கொண்டும் ஆத்மார்த்த பூஜா மூர்த்தியாகிய சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்துக் கொண்டும் எழுந்தருளி யிருந்தனர்.

இன்றும் தருமபுர மடாலய தாபகர்களாகிய இவர் களுக்கு வைகாசி மாதம் அமரபக்கம் சப்தமி தினத்தில் மிகச்சிறப்பாகக் குருபூஜை நடந்து வருவது அன்பர் கள் யாவரும் நன்குணர்ந்ததேயாகும். இப்பொழுது அந்த ஞானபீடத்தில் எழுந்தருளி இருந்து அருட் செங்கோல் செலுத்தும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியரவர்கள் 24-வது** அருட்குரவ ராவார்கள். இவர்கள் சைவ நன்மக்களுக்குப் பேருப

காரமாக பல ஆலயங்களைப் பரிபாலித்தும், பல சமயக் கூட்டங்களைக் கூட்டுவித்தும், சமயநூல் பல அச்சிடுவித்து வழங்கியும், நூல்நிலயங்கள் பல அமைத்தும் அருள்பாலிப்பதன்றி ஞானசம்பந்தம் எனும் நல்லதோர் இந்தத் திங்களிதழையும் வெளியிட்டு வருகிறார்கள். மேலும் இளஞ்சிறார்களாகிய எம்மனோர்க்கும் கல்வி கற்பிக்கவேண்டுமென்ற பெருங்கருணைத் திருநோக்கத்தால் தங்களாதீனத்திலேயே (வேதசிவாகம, தேவார)ப் பாடசாலைகளை ஏற்படுத்திக் கல்லூரியின் அமைப்புப்படி ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்களையும் உண்டி, உடை, உறைவிடம் முதலிய பல வசதிகளுடனும் கற்பிக்கச்செய்தும் வருகின்றார்கள். அரசாங்க முறைப்படி ஓர் ஆரம்ப பாடசாலையையும் தொடங்கி நடத்தி வருகிறார்கள். அவர்கள் திருவடிக்கமலங்களை மனமொழி மெய்களால் வணங்கி வாழ்த்துகின்றேன்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான சித்திநெறி
  காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
  மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றருமை வாழ்ஞான சம்பந்தக்
  குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
  தழைக மாதோ!

# The Gleanings From Saiva Siddhantha

*(Sri. R. Shanmukhasundaram Chettiar, Madras.)*

## 3. The Existence of God Supreme (continued).

Establishing thus that the Universe is a reality with change as of its central factor, Saint Meikandar proceeds to find proof of the existence of God, who is the instrumental cause of the Universe. He begins with the hypothesis that the Absolute Being, in whom the Universe has dissolved itself, is the cause for its creation, and other processes. Sivajnana Munivar in explaining the truth of this hypothesis frames three syllogisms, the first of which runs as follows:—

> What is non-existent cannot be brought into being,
> The Universe is brought into being,
> Therefore, the Universe is not non-existent.

This syllogism is sought to prove that the Universe is eternal in the sense that it endures without an end. 'God is eternal, but every migrating soul is co-eternal with Him.' The Universe may also be said to be infinite in Hegelian sense, though finite in the more customary interpretation. J. S. Mackenzie observes that 'according to the Hegelian conception, a circle or other curve that returns into itself is the true type of infinity. On this interpretation what is infinite may be quite definite, and it is not easy to see how, on any other interpretation, a definite meaning can be given to it. Before the introduction of Einstein's theory of the spatia-temporal system, it was difficult to

understand how the material Universe could be thought of either as finite or as infinite. * * * * But the idea of the curvature of space enables us to regard it as infinite.' The Buddhists postulate that this changing world emanated from blank vacuum, and that in the process of change the decay of an object is the cause of the formation of another object.

It is an established principle in Saiva-Siddhantha that out of nothing, nothing comes. This is called SATKARYAVADA, the principle of 'Exnihilo nihil fit.' Swedenberg (1688 - 1772) also says that 'from absolute nothing, nothing comes into existence.' If it is not admitted that products pre-exist potentially before creation, a pot cannot be evolved from clay. The Universe is evolved from the premordial principium or the permanent substance lying back under it and it cannot be said to have emerged from it. A sharp distinction made between the expressions 'emerge and 'evolve' is worthy of note. Mr. Mackenzie states in his COSMIC PROBLEMS that "when anything is said to 'emerge', this is generally understood to mean that it was already present before it came out." In digging a well, when a rock is removed, the water underneath it springs up. Water is here said to have 'emerged'. It was already present underneath the rock and it appears now in its true shape and form. But 'evolving' is different. An object is said to have 'emerged' when the material, other than casual enclosing it has been removed. It is said to have been 'evolved' when the material, which

was hiding it, is itself the inherent cause of the effect. Two causes are generally spoken of in respect of an effect. They are inherent and instrumental causes. The instrumental cause includes an agent who occasions an object into being and the implements used for its production.

The Universe has the primordial principium or MAYA as its inherent cause. An inherent cause is the subtle embodiment of all the collectoin of energies of the product to be evolved out of it. In Maya the collective energies of the Universe lay already and the Universe has been evolved out of this Maya. In other words, the Universe has been pre-existent in Maya and has only been regenerated by evolution and it is not created out of nothing.

Saint Meikandar too proceeds to state that the Universe was evolved by God. He postulates the hypothesis that without an artificer or agent, no material object can be produced. Sivajnana Munivar here again employs another syllogism to explain the existence of an agent and it runs as follows:

> A reality which is becoming has an operator,
> The Universe is a reality which is becoming,
> Therefore, the Universe has an operator.

Still another syllogism he frames to prove that the operator is God, the Disposer of all, in whom the Universe is dissolved. It is given hereunder,

> The ground, where an object is dissolved,
> is the place from which it (object) regenrates,
> The Universe is dissolved in God, the Disposer of all,
> Therefore, the Universe regenerates from God,
> the Disposer of all.

(To Continued)

# Tillai-Vazh-Anthanar

*(Sri S. Kannuswamy Pillai, B.A., Dharmapuram Adheena Vidwan.)*

[Tillai is the Blinding tree (Excoecaria agallocha). A forest of Tillai trees on the banks of the present Coleroon went originally by the name of Tillaivanam. When the temple of Natarajar, Lord of Dance, was founded therein -perhaps the oldest temple in South India - Tillaivanam came to be called Koil (Temple) and later on Chidambaram. All the temple duties and services connected with the presiding Deity, Natarajar, were, from days of yore, being performed by a sect of Three Thousand people, who were called the Three Thousand of Tillai or the Tillai-Vazh-Anthanar. The term Anthanar in Tamil denotes the virtuous souls full of the milk of human-kindness, the quality divine. It has later on been applied to denote the truly religious Brahmans who never swerved from the path of virtue and who were the very embodiment of graceful kindness]

The Tillai-vazh-Anthanar are the ordained officiating priests and servants of the Great Lord of Dance. They are the greatest of the great. Scrupulously do they adhere to upright conduct. Devotion to the Feet of the Lord was their daily **tapas**, the outcome of their ever-growing kindness.

Deck and don the Lord with the costliest of jewels and clothes, garland Him with the daintiest of flowers, chant and sing His praise and grace, perform without fail His daily puja, and celebrate the annual festivals with great eclat — these and the sacred rituals and ceremonials connected therewith constitute their sacred Duties and Serices; and they are peformed duly and devotedly by these virtuous souls.

With virtue as their sole reward and the benignant shower of His Grace on all the souls of this mundane world as their aim, they tend the three (Vedic) fires, pursue the path of righteousness and study the four great vedas and the six vedangas. Indeed, they shine with righteous splendour as the accredited devoted servants of the Lord of Dance.

Their descent is flawless and their conduct ever upright. By practising the six kinds of occupation pertaining unto them, they drive poverty and sorrow not only from themselves but also from this world. Holy ashes, they deemed their greatest wealth; Siva's Infinite Grace is the greatest earthly gift, they are after. Noble Souls!

Clearly do they know the four paths of salvation and they excel in pursuing them. Gifts they give and tapas they perform adequately. They are always, champions of rectitude and shortcomings they have none. Surely, they have no future births. Honour and patience are the two sterling qualities the world adore and these qualities form the main-stay of the house-hold life they lead.

Pride they have none. Filled with gracious kindness to one and all, they are the true Divine Brahmans; the noble band of Three Thousand. Fortunate in having secured the right of service to the Lord of the Universe, even in this life, thay have no further salvation to seek. They

are equal to themselves in greatness and so, are they pre-eminent.

**Nambi** sang the immortal poem "Tiru-Thonda-Thogai" which is looked upon as the spiritual essence of the sweet and graceful **Tamil** the classical language of the South! He sang the same at the behest of Thiagarajar, the Lord of Arur, who hinted the first line "Tillai-Vazh-Anthanartham Adiyarkum Adiyen" (I am the devotee of the devotees of Tillai-Vzah-Anthanar.) Such is their unique greatness! Need we add that words fail naturally to add anything more?

Hail, Tillai-Vazh-Anthanars, the highest of the high in this wide wide world! Live they long and shine forth with splendour praising the incomparable Dance of Universalism.

It will be in the fitness of things to end their theme, with a translation of the first two verses of the **Purana**, a translation from the mighty pen of the illustrious soul of Saivaism, the late lamented J. M. Nallasami Pillai.

"O. thou, the Beginning. the, Middle, Limitle-s-Limit,
The Light and the wisdom and all things manifest,
The indivisible one, the Female and the Male
Glory, Glory to Thy Dance in Tillai, the intellectual
Region of Universalism.

O, Thou, the Light from which speech and thought turn back
The very Form of Grace
The wonderful Presence, the crown resting on the rare vedasiras
In the beautiful Chit Sabah of Chit Parvyoma
Thou doth dance delightedly; Glory Glory to Thy
tinkling Foot."

# VEDAS & SAIVA AGAMAS

The only real books are the Vedas and Saiva Agamas. All other books are derived from these. These two books were eternally revealed by the perfect God. Of these, the Vedas are general and given out for all; the Agamas are special and revealed for the benefit of the blessed, and they contain the essential truth of the Veda and Vedanta. Hence all other books are Purvapaksha and the Sivagamas alone form the Siddhanta.

ஓதுசம யங்கள்பொரு ளுணருநூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
லாதலினா லிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மானடிக்கீ ழடங்கும்.

Religions and postulates and text books are various, and conflict one with another. It is asked which is the true religion, which the true postulate and which the true book. *That is the true Religion, postulate and book, which not conflicting, with this or that, comprices reasonably everything within its own fold.* Hence all these are comprised by the Vedas and Saiva Agamas. And these two latter are imbeded in the sacred Foot of Hara.

---

குருபாதம்

## திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான தேவஸ்தானங்களில் நடைபெற்ற

# சமயப் பிரசாரங்கள்.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ சண்முக விலாசப் பிரசார சபாமண்டபத்தில் 12-3-43உயன்று மாயவரம், முனிசிபல் உயர்தரப்பள்ளித்தமிழாசிரியர், வித்துவான், திரு. இராம லிங்கம் பிள்ளையவர்கள் காழிப்பிள்ளையார் என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்கள்.

## 14—3—43-ல் நிகழ்த்தப்பெற்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சென்னை, கார்ப்பொரேஷன் உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் அப்பரும் அப்பூதியும் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

## 21—3—43-ல் நிகழ்த்தப்பெற்றவை.

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம் பிரசங்கசபா மண்டபத்தில் வலிவலம் தேவஸ்தான ஓதுவார் திரு. திருஞான சம்பந்த முதலியார் அவர்கள் சிவாலயவழிபாடு என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான், திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் மனிதப்பிறவியும்வேண்டுவதே என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சிதம்பரம், செட்டியார் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்களைக்கொண்டு தமிழ்வேந்தர் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு செய்விக்கப்பட்டது.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம் சைவசமயப் பிரசாரசபா மண்டபத்தில் செங்கற்பட்டு, அர்ச் கொலம்பியாஸ் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான் திரு. K. M. வெங்கட்ட

# மதிப்புரை

அன்புவிடுதூது— சொற்சுவை பொருட்சுவை ஒருங்கு நிறைந்த இந் நூலினை இயற்றித் தமிழுலகிற் களித்தார் புதுவை திரு. P. M. இராசமாணிக்கனார் ஆவார். ஈரம், பற்று, நேயம் முதலிய சொற்களை எடுத்துக்கொண்டு அவைகள் அன்பு என்னும் பொருள் படுதலை நயம்பட விளக்கியதும், அன்பு என்பதில் உயிர் எழுத்து, ஒற்றெழுத்து, உயிர்மெய்யெழுத்து என மூன்றும் அமைந் திருத்தலை விளக்கியதும், 'ககரத்தைக்கண்ட ணகரம்போல் மாறி ஙகரம் போலே தனித்தேன்'' என்பது முதலாகிய இலக்கண முடிபுகளை சுவைபட அமைத்திருப்பதும், பிறபொருள்களைத் தூதனுப் பாது அன்பினைத் தூதாக அனுப்புதற்குக் காரணங் கூறியதும் நூலாசிரியது நுண்ணிய கவித்திறமையை நன்கு எடுத்துக்காட்டா நிற்கும். மேலும் முருகனது சிறப்பைக்கூறும் நூலாகவும் அமைந்துள்ளது. குறிப்புரையுடன் கூடியது. இதன் விலை அணா 12. (தபாற்கூலி வேறு)

முகவரி:- முருகவேள் முத்தமிழாகரம்,
113, அம்பலத்தாடையர்,
புதுவை, F. India.


உ

## "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச்சார்பாய் எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் முழு உண்மைகளை உணர்வதற்கும் தமிழறிவைப் பெறுதற்கும் பெருந்துணையாவது.

### ஆண்டுக் கையொப்பம்

| | |
|---|---|
| உள்நாடு (இந்தியா, இலங்கை) அஞ்சற்கூலியுள்பட | ரூ. 1—8—0 |
| வெளிநாடு ... ... ... ... | ரூ. 2—0—0 |

குறிப்பு:- தனிப்பிரதி கிடையாது. ஓராண்டிற்குக் குறைந்த கையொப்பம் இல்லை.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
ஷண்முகவிலாசம்,
தருமபுரம், மாயவரம்.